பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

30 06 2025 6 45

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மஞ்சள் ஏற்றுமதியை ஒரு பில்லியன் டாலர் அளவிற்கு அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

2. ரயில் டிக்கெட் முன்பதிவு அளவை 5 மடங்கு அதிகரிக்கும் வகையில் புதிய பயணச்சீட்டு முன்பதிவு முறை இந்த ஆண்டு இறுதிக்குள் செயல்பாட்டுக்கு வரும் என்று ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

3. சென்னை குத்தம்பாக்கம் புதிய புறநகர் பேருந்து முனையம் நவம்பர் மாதத்திற்குள் பயன்பாட்டிற்கு வரும் என்று மாநில அமைச்சர் திரு. சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

4. சிவகங்கை மாவட்டத்தில் காவல்நிலையத்தில் இளைஞர் மரணமடைந்த சம்பவம் குறித்து, நீதி விசாரணை நடத்த வேண்டும் என்று, அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

5. அமெரிக்க ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டி பட்டம் வென்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<>>>>

மஞ்சள் ஏற்றுமதியை 2030ஆம் ஆண்டுக்குள் ஒரு பில்லியன் டாலர் அளவிற்கு அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

தெலங்கானா மாநிலம் நிஸாமாபாதில் தேசிய மஞ்சள் வாரியத்தின் தலைமையகத்தை திறந்து வைத்துப் பேசிய அவர், இந்த வாரியம் அமையப் பெற்றதன் மூலம், மஞ்சள் விவசாயிகளின் 40 ஆண்டுகால கனவு நனவாகி இருப்பதாக கூறினார்.

நிஸாமாபாத் சுற்றுப்புறப் பகுதியில் சாகுபடி செய்யப்படும் மஞ்சள் உயர் தரம் மிக்கதாக இருந்தபோதிலும் உரிய விலை கிடைக்காமல் இருந்ததை அவர் சுட்டிக்காட்டினார்.

புதிதாக தொடங்கப்பட்டுள்ள மஞ்சள் வாரியத்தின் மூலம், சாகுபடியில் புதிய தொழில்நுட்பங்களைப் பின்பற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

மஞ்சளின் மருத்துவ குணங்களை எடுத்துரைத்த திரு. அமித் ஷா, பல்வேறு நோய்களைக் குணப்படுத்தும் இயற்கையான மருத்துவ தன்மை மஞ்சளுக்கு இருப்பதை ஒட்டுமொத்த உலகமும் உணர்ந்திருப்பதாகவும் தெரிவித்தார்.

<<<<>>>>

ரயில் பயணத்திற்கான முன்பதிவு பட்டியலை ரயில் புறப்படுவதற்கு 8 மணி நேரம் முன்பாக வெளியிட படிப்படியாக நடவடிக்கை எடுக்குமாறு அத்துறைக்கான அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் ரயில்வே வாரியத்தை அறிவுறுத்தியுள்ளார்.

இதன்படி, பிற்பகல் 2 மணிக்கு புறப்படும் ரயிலுக்கான பயணியர் பட்டியல் முந்தைய தினம் இரவு 9 மணிக்கு இறுதி செய்யப்படும் என்று ரயில்வேயின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

காத்திருப்பு பட்டியலில் உள்ள பயணிகள் மாற்றுப் பயணத்தை மேற்கொள்வதற்கு இந்த நடவடிக்கை உதவிடும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் தற்போதுள்ள டிக்கெட் முன்பதிவு அளவை ஐந்து மடங்கு அதிகரிக்கும் வகையில் புதிய பயணச்சீட்டு முன்பதிவு முறை இந்த ஆண்டு இறுதிக்குள் செயல்பாட்டிற்கு வரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் ஒரு நிமிடத்திற்கு ஒன்றரை லட்சம் டிக்கெட்டுகள் முன்பதிவு செய்ய முடியும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

மேலும் தட்கல் டிக்கெட் முன்பதிவுக்கு ஆதார் அல்லது டிஜி லாக்கரில் கிடைக்கக் கூடிய அரசு அடையாள ஆவணங்களைப் பயன்படுத்தி அங்கீகரிக்கும் முறையைப் பின்பற்றவும் ரயில்வே முடிவு செய்துள்ளது.

<<<<>>>>

சங்க இலக்கியம் சொற்களால் வடித்த வாழ்வியல் முறைகளுக்கு அறிவியல் வழியில் நிறுவப்பட்ட சான்றாக கீழடி அமைந்துள்ளது என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இங்கிலாந்து ஆராய்ச்சி அமைப்பு வெளியிட்டுள்ள தகவலை தமது சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ள முதலமைச்சர், கீழடி அகழ்வாய்வுகள் மூலம் இந்தியாவின் கடந்த காலத்தையும், சங்ககால வாழ்வியல் முறைகளையும் அறிந்துகொள்ள முடிவதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

சென்னை பூவிருந்தவல்லியை அடுத்த குத்தம்பாக்கத்தில் அமைக்கப்பட்டு வரும் புதிய புறநகர் பேருந்து முனையம் நவம்பர் மாதத்திற்குள் பயன்பாட்டிற்கு வரும் என்று மாநில அமைச்சர் திரு. சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

இந்தப் பேருந்து முனைய கட்டுமானப் பணிகளை ஆய்வு செய்த பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதனைத் தெரிவித்தார்.

**(Voice Byte – Sekar Babu – 55 sec)**

மெட்ரோ ரயில் கட்டுமானப் பணிகள் முடிவடைந்த பிறகு மாதவரம் பேருந்து நிலையத்தில் இருந்து தென் மாவட்டங்களுக்கு கூடுதல் பேருந்துகள் இயக்கப்படும் என்றும் திரு. சேகர் பாபு குறிப்பிட்டார்.

<<<<>>>>

மலைக் கிராமங்களில் இருதய நோய் சிகிச்சைக்காக வருவோருக்கு உதவியாக ஆரம்ப சுகாதார நிலையங்களில் லோடிங் டோசஸ் திட்டம் தொடங்கப்பட்டிருப்பதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் சுமார் 22 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான மருத்துவ கட்டமைப்புகளை திறந்து வைத்துப் பேசிய அவர், இத்திட்டத்தின் மூலம் 3 மருந்துகள் அடங்கிய 14 மாத்திரைத் தொகுப்புகள் வழங்கப்படுவதாக கூறினார்.

இளம் வயது கர்ப்பிணிகள் உயிரிழப்பதைத் தடுக்க மாநிலத்தின் 18 இடங்களில் பிரசவத்திற்கு முன்பும், பின்பும் மருத்துவமனையிலேயே தங்கி சிகிச்சை பெறும் வசதி ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கொடைக்கால் பெருமாள் மலையில் இத்தகைய வசதி ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

<<<<>>>>

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் காவல்நிலையத்தில் கோவில் காவலாளி மரணமடைந்த சம்பவம் குறித்து, மாவட்ட நீதிபதி தலைமையில் விசாரணைக் குழு அமைக்க வேண்டும் என்று, அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அந்த இளைஞர் தவறு செய்ததாக காவல்துறை கருதினால் அவரைக் கைது செய்து நீதிமன்றம் மூலம் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமே தவிர காவல்துறையினர் சட்டத்தை முழுமையாக தங்கள் கைகளில் எடுத்துக்கொண்டது கண்டிக்கத்தக்கது என்று கூறியுள்ளார்.

இதேபோன்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் திரு. சண்முகமும் காவல் நிலையத்தில் இளைஞர் உயிரிழந்த சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவத்தில் தொடர்புடைய காவலர்களை உடனடியாக கைது செய்ய வேண்டும் என்றும், பாதிக்கப்பட்ட இளைஞரின் குடும்பத்தினருக்கு அரசு வேலை வழங்க வேண்டும் என்றும் திரு. சண்முகம் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<>>>

நீலகிரி மாவட்டம் கூடலூர் வனக் கோட்டத்திற்குட்பட்ட கிராமங்களில் வன விலங்குகள் தாக்குதலில் இருந்து மக்களைக் காக்கும் வகையில் சூரியசக்தி மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

இதன் மூலம் யானைகள் கடந்து செல்லும் பகுதிகளில் பொதுமக்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte – Saravanan – 48 sec)**

<<<>>>

*இருவரிச் செய்திகள்*

ஈரான் நாட்டின் யுரேனியம் செறிவூட்டும் திறன் இன்னும் முழுமையாக அழிக்கப்படவில்லை என்று சர்வதேச அணுசக்தி முகமையின் தலைமை இயக்குநர் திரு. **Rafael Grossi** தெரிவித்துள்ளார்.

-------------

நேபாளத்தில் தேசிய நெல் தினத்தையொட்டி விவசாயிகள் நாற்று நடும் பணியை மேற்கொண்டனர்.

-------------

ராஜஸ்தான் மாநிலம் பரத்பூர் மாவட்டத்தில் மண்சரிவில் சிக்கி 4 பேர் உயிரிழந்தனர். 8 பேர் காயமடைந்துள்ளனர்.

-------------

திரிபுரா மாநிலத்தில் விவசாயிகளின் வருவாயை அதிகரிக்கும் வகையில் சோதனை அடிப்படையில் மா சாகுபடி மேற்கொள்ளப்பட உள்ளதாக அம்மாநில வேளாண் அமைச்சர் திரு. ரத்தன்லால் நாத் கூறியுள்ளார்.

-------------

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கோவை மருதமலை முருகன் கோவிலில் சாமி தரிசனம் செய்தார்.

-------------

திருப்பத்தூர் மாவட்டம் ஏலகிரியில் கோடை விழா நேற்று நடைபெற்றது.

-------------

கரூரை அடுத்த ஆத்தூரில் உள்ள பாரத் பெட்ரோலியம் நிறுவனத்தின் எரிபொருள் சேமிப்புக் கிடங்கில் வெடிகுண்டுகளை கண்டறிந்து செயலிழக்கச் செய்யும் ஒத்திகை மேற்கொள்ளப்பட்டது.

-------------

நீலகிரி மாவட்டம் ரேலியா அணைப் பகுதியில் காட்டெருமையின் காலில் சிக்கியிருந்த பிளாஸ்டிக் பைப்பை வனத்துறையினர் மயக்க ஊசி செலுத்தி அகற்றினர்.

-------------

காஞ்சிபுரம் மாவட்டம் மாங்காடு அருள்மிகு காமாட்சி அம்மன் கோவிலில் பக்தர்களுக்கு நாள் முழுவதும் பிரசாதம் வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

-------------

சென்னை மாநகராட்சியில் 211 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநகராட்சி தெரிவித்துள்ளது.

-------------

*விளையாட்டுச் செய்திகள்*

அமெரிக்க ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டி பட்டம் வென்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், 21-18, 21-13 என்ற செட் கணக்கில் கனடாவின் **Brian Yang**-ஐ வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் தன்வீ ஷர்மா வெள்ளிப் பதக்கம் வென்றார்.

---------------

பல்கேரியா ஜூனியர் சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Naishaa Kaur** வெள்ளிப் பதக்கம் வென்றார்.

**<<<<The End>>>>**